பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

16 12 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. 1971-ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றிபெற்ற தினம் இன்று விஜய் திவஸ்-ஆக கொண்டாடப்படுகிறது.
2. அரசியல் சாசனத்தின் 75 ஆண்டுகால பயணம் குறித்த சிறப்பு விவாதம் தற்போது மாநிலங்களவையில் நடைபெற்று வருகிறது.
3. இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயகே- இன்று புதுதில்லியில் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.
4. பிரபல ஹிந்துஸ்தானி தப்லா கலைஞர் ஜாஹிர் ஹுசேன் அமெரிக்க மருத்துவமனை ஒன்றில் மாரடைப்பால் காலமானார்.
5. உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு இன்று சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

1971-ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றிபெற்ற தினம் இன்று விஜய் திவஸ்-ஆக கொண்டாடப்படுகிறது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இந்நாளையொட்டி விடுத்துள்ள செய்தியில், இந்திய வீரர்களின் தைரியமும், வீரமும் 1971-ஆம் ஆண்டு போரில் இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்ததாகக் கூறியுள்ளார்.

வீரதீரமிக்க நெஞ்சங்களின் ஒட்டுமொத்த தியாகத்தையும் நாடு என்றும் நினைவில் வைத்திருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்களத்தில் அவர் படைத்த சாதனை ஒவ்வொரு இந்தியரின் உணர்வையும் தூண்டுவதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விடுத்துள்ள செய்தியில் விஜய் திவஸ் வெற்றி தேடித்தந்த போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவதாகக் கூறியுள்ளார்.

இந்திய வீரர்களின் வீரமும், உறுதிப்பாடும் ஈடு இணையற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னலமற்ற தியாகம் புரிந்த நாயகர்கள் வரலாறு படைத்திருப்பதாகவும், ஒவ்வொரு இந்தியருக்கும் தேசப்பற்றை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக அவர்கள் ஆற்றிய சேவையை என்றென்றும் போற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளதாகவும் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், நாட்டை காப்பதற்காக இன்னுயிர் ஈந்த இந்திய வீரர்களுக்கு தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளார்.

அர்ப்பணிப்பு உணர்வோடும், நிலையான பாதுகாப்பு சிந்தனையோடும் நாட்டை காப்பதற்கு எதிரிகளுடன் தீரத்துடன் போராடிய வீரர்களை இந்நாளில் தாம் நினைவு கூர்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் அசைக்க முடியாத வீரத்துக்கும், தியாகத்துக்கும் தலைவணங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர்கள் காட்டிய முன்னுதாரணம் வரும் சந்ததியினருக்கு நாட்டுப்பற்றை ஊக்குவிப்பதாகவும், முக்கிய வரலாற்றுப் பதிவாக விஜய்திவஸ் அமைந்துள்ளது என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்ட வீரர்களை விஜய் திவஸ் நாளில் தாம் வணங்குவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

நாட்டுப் பற்றும் தளராத தைரியமும் இருந்ததால்தான் 1971-ஆம் ஆண்டு போரில் நாட்டைக் காக்கும் பணியில் நமது வீரர்களால் சிறப்பாக செயலாற்ற முடிந்ததாக திரு ராஜ்நாத்சிங் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வீரர்களின் வெற்றி வேட்கையை இந்நாளில் தாம் போற்றுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

நாட்டைக் காக்க வேண்டும் என்ற தன்னலமற்ற ஈடுபாடு இந்தியாவையும், நமது தேசத்தின் கொடியையும் உயர்த்தி பிடித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்களின் உறுதிப்பாடும், அர்ப்பணிப்பு உணர்வும் வரலாற்று ஏடுகளில் என்றென்றும் நினைவுக்கூரத்தக்கவை என்று திரு எல் முருகன் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி புதுதில்லி போர் நினைவுச் சின்னத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

இந்நாளையொட்டி சென்னையில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் மேஜர் ஜெனரல் ஆர் எம் ஸ்ரீனிவாஸ் தலைமையில் உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

முப்படைகளின் சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.,

தென்மண்டல ராணுவத் தலைவர் லெப்டினென்ட் ஜென்ரல் **K.S. Brar** போர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

மூத்த ராணுவ அதிகாரிகளும், போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

**[]<<<>>>[]**

அரசியல் சாசனத்தின் 75 ஆண்டுகால பயணம் குறித்த சிறப்பு விவாதம் தற்போது மாநிலங்களவையில் நடைபெற்று வருகிறது.

கேள்வி நேரத்தை ஒத்திவைத்து நடைபெறும் இந்த சிறப்பு விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், புனிதமான அரசியல் சாசனத்தின் மேன்மையை போற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நிலைநாட்ட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

75 ஆண்டுகளாக அரசியல் சாசனம் நமக்கு அளித்த அனுபவங்கள் மேலும் நம்மை செம்மைப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்,

விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.,

முன்னதாக மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

மத்திய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் உத்யம் இணையதளத்தில் ஐந்து கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் இது தொடர்பாக மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி அளித்த பதிலில், இந்திய பொருளாதாரத்தில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் விரைந்து வளர்ச்சிபெற்று வருவதாக கூறினார்.

இ-ஷ்ரம் இணையதளத்தில் 30 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்திருப்பதாகவும் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின் நம்பகத்தன்மை குறிதது தேவையற்ற கேள்விகளை காங்கிரஸ் எழுப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்.

காங்கிரஸ் கட்சி எழுப்பும் சந்தேகங்களை அதன் கூட்டணிக் கட்சிகளே ஏற்றுக்கொள்ள வில்லை என்று கூறினார்.

ஜம்மு-கஷ்மீர் முதலமைச்சர் திரு ஓமர் அப்துல்லா காங்கிரஸ் கட்சியின் கருத்துக்கு எதிராக பதிவிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.,

இதுபோன்று காங்கிரஸ் கட்சியின் பல கூட்டணி கட்சிகளும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்துக்கு எதிராக காங்கிரஸ் கட்சி கூறிவரும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

**[]<<<>>>[]**

இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயகே-வை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி ஆகியோர் வரவேற்றனர்.

குடியரசு தலைவர் மாளிகையில் இன்று காலை பாரம்பரிய முறைப்படி இலங்கை அதிபருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மூன்று நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள திரு அனுர குமார திசநாயகே பிரதமர் திரு நரேந்திரமோடியை இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்தும், பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இன்று மாலை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வையும், குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்ககரையும் சந்தித்து பேசவுள்ளார்.

இலங்கை அதிபராக திரு திசநாயகே பதவியேற்றப் பின் இந்தியா வருவது இது முதல் முறையாகும்.

இலங்கை அதிபரின் வருகை குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருதரப்பிலும் பயன்தரத்தக்க ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இருதரப்பு பேச்சுக்கள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள முதலீட்டாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலும் இலங்கை அதிபர் கலந்து கொள்கிறார்.

கடந்த நிதி ஆண்டில் இந்தியா - இலங்கை இடையேயான இருதரப்பு வர்த்தகம் ஐந்து புள்ளி ஐந்து பில்லியன் டாலரை எட்டியுள்ள நிலையில் இலங்கை அதிபரின் முதலீட்டுக்கான சந்திப்பு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பெருங்கடல் மண்டலத்தில் இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள நாடாக இலங்கை உள்ளதை அடுத்து, பிரதமரின் சாகர் தொலைநோக்குத் திட்டம் மற்றும் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை என்ற வெளியுறவு கொள்கையை நடைமுறைப்படுத்தவும் உகந்த நாடாக இலங்கை திகழ்கிறது

**[]<<<>>>[]**

பிரபல ஹிந்துஸ்தானி தப்லா கலைஞர் ஜாஹிர் ஹுசேன் காலமானார். அவருக்கு வயது 73.

அமெரிக்காவில் உள்ள சான்பிரான்ஸிஸ்கோ மருத்துவமனையில் மாரடைப்பு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த ஜாஹிர் ஹுசேனின் உயிர் நேற்று இரவு பிரிந்ததாக அங்குள்ள அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இசைத்துறையில் படைத்த சாதனைகளுக்காக 1988-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் பத்மஸ்ரீ விருதும், 2002-ஆம் ஆண்டு பத்மபூசன் விருதும், 2023-ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதும் ஜாஹிர் ஹுசேனுக்கு வழங்கப்பட்டது.

60 ஆண்டுகளுக்கு மேல் தன்னிகரற்ற தப்லா கலைஞராக சாதனைப்படைத்த ஜாஹிர் ஹூசேன் ஐந்து முறை உலகின் மிக உயர்ந்த கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.,

பிரபல ஹிந்தி திரைப்படங்களிலும் ஜாஹிர் ஹுசேன் நடிகராகவும் வலம் வந்துள்ளார்.

ஜாஹிர் ஹுசேன் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் தப்லா மாஸ்ட்ரோ என உலக அளவில் இசை ரசிகர்களால் போற்றப்பட்டு வரும் ஜாஹிர் ஹுசேன் மறைவு மிகுந்த வருத்தம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமேடி கூறியுள்ளார்.

இந்தியாவின் பாரம்பரிய இசையை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்ற ஜாஹிர் ஹுசேன் கோடிக்கணக்கான உள்ளங்களை தமது இசையால் ஈர்த்தவர் என்று அவர் குறிப்பிட்டுள்ளர்.

ஆத்மார்த்தமான அவரது இசை படைப்புகள் பல தலைமுறை இசை கலைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்று அவர் கூறியுள்ளார்.

ஜாஹிர் ஹுசேன் குடும்பத்திருக்கு தமது இரங்கலை திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இசைத்துறையில் மிக உயர்ந்த சாதனையாளராக ஜாஹின் ஹுசேன் விளங்கியவர் என்றும், அவரின் இழப்பு மிகுந்த வருத்தத்துக்குரியது என்றும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் குகேஷ் இன்று சென்னை திரும்பினார்.

சென்னை விமான நிலையத்தில் அவருக்கு தமிழ்நாடு அரசு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டித் தொடரில் 14-வது சுற்றில் சீனாவின் டிங் லாரனை வென்று உலக செஸ் சாம்பியன் பட்டத்தை குகேஷ் வென்றார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய குகேஷ், தமது நீண்டநாள் கனவு நிறைவேறியதாக தெரிவித்தார்.

தமக்கு ஊக்கம் அளித்து வரும் அனைவருக்கும் தமது நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.